1974 ஏப்ரல் 10]

திரு. மா. வே. நாராயணசாமி: தலைவர் அவர்களே, எல்லா நகராட்சிகளிலும் ஒன்று இந்திய முறை அடிப்படையிலாவது அல்லது ஆங்கில முறை அடிப்படையிலாவது மருத்துவ மனையை தொடங்குகின்ற அளவுக்கு மத்திய அரசை வற்புறுத்தி, மாநில அரசு நிதி பெற்று ஆவன செய்யுமா? மத்திய அரசு மறுத்தாலும், மாநில அரசு நகராட்சிகளில் ஒரு மருத்துவமனையைத் துவங்க முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, நகராட்சி அங்கு இருப்பதே அதற்கு அங்கு ஆட்சி நடத்துவதற்கு ஆற்றல் இருக்கிறது என்பது தான் பொருள். அப்படி ஒரு ஆட்சியை நடத்துகிறபொழுது, இன்னொரு ஆட்சியில் உள்ளவர்களை இங்கே வந்து மருத்துவ மனை துவங்க வேண்டும் என்று கேட்பது நகராட்சி மன்றத் தலைவருக்கு அவ்வளவு பெருமையானது அல்ல.

Work Centres for out-of-School Youths

* 726 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether the Central Government have proposed any scheme for establishing Work Centres for training out-of-School Youths in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) ஆம்.

(இ) இத் திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோள், பள்ளிக் கல்வியை முடித்து வெளிவரும் இளைஞர்களுக்குச் சொந்த தொழிலைத் தொடங்குவதற்கு வாய்ப்புகளை அளிக்கும் அடிப் படையில், அவர்கள் தாமாகவே ஓர் உற்பத்தித் தொழில் ஏற்படுத் திக்கொள்வதற்கு உதவுதலே இங்கு அளிக்கப்படும் பயிற்சியின் நோக்கமாகும். இதற்கு மத்திய அரசின் ஒப்புதல் வந்தால் நாம் இதை ஆரம்பிப்பதற்கு இயலும்.

திரு. ஆ. பரந்தாமன்: இந்த ஜாப் ஓரியன்டேஷன் ஸ்கீம் மத்திய அரசினால் கொண்டுவரப்படுகிறது என்று சொல்கிறார்கள். இதற்கு எவ்வளவு செலவு ஆகிறது, எப்பொழுது தொடங்க இருக் கிறார்கள் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: மத்திய அரசிடத்திலிருந்து வந்த கடிதத்திற்கு பதில் எழுதியிருக்கிறோம். அது எவ்வளவு விரைவில் வருகிறதோ அவ்வளவு விரைவில் மாநில அரசும், மத்திய அரசும் சேர்ந்து அந்தத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வரும்.

Watar supply from Kadampakkulam.

* 308 Q.—THIRU G. R. EDMUND: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether any representation, for the formation of a separate supply channel for the 12 tanks under the Kadampakkulam tank in Tiruchendur taluk, has been received by the Government from the agriculturists of that area?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அண்மையில் இல்லை.

திரு. க. உரொ. எட்மண்ட்: அண்மையில் வரவில்லை என்ற பதிலிலிருந்து நீண்ட நாட்களுக்கு முன்னால் தொகுதி மக்களிடமிருந்து அப்படிப்பட்ட கோரிக்கை வந்திருக்கிறது என்பதை மறைமுகமாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் அமைச்சர் அவர்கள். நீண்ட காலமாக இந்தத் திட்டம் வற்புறுத்தி வரப்படுகிற காரணத்தினாலும் அது இந்தப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு மிகப் பலன் உள்ள திட்டமாக இருப்பதின் காரணத்தினாலும், இந்தத் திட்டத்தை கூடிய விரைவில் நிறைவேற்றினால் உணவு உற்பத்தியை நாம் அதிகப்படுத்தி மிக முன்னேறிச் செல்லலாம் என்ற காரணத்தினாலும், அரசு இந்தத் திட்டத்தை கூடிய விரைவிலே நிறைவேற்றுவதற்கு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கடம்பாக்குளத்திற்கு கீழே உள்ள அயக்கட்டுதார்களுக்கு முன் உரிமை இருக்கிறது. குளப்பாசிதார்களுக்கு பின் உரிமை தான். முன் உரிமை பெற்ற கடம்பாக்குள ஆயக்கட்டுதார்கள் பாசன வசதியில் எந்த வகையிலும் பாதகம் வராத வகையில் ஏற்பாடு செய்து—கடம்பாக்குளத்து ஆயக்கட்டுதார்கள் தங்கள் ஆட்சேபனையை தெரிவித்திருக்கிறார்கள் என்று அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது—பல ஆண்டுகளாக இது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மை தான்—கீழே உள்ள பாசனதார்களுக்கு பாதகம் ஏற்படாமல் பூமி மட்டத்தைக் குறைக்காமல் 4 மடைகளைப் புதிதாக அமைக்கலாம் என்று தலைமைப் பொறியாளர் ஆலோசனை தெரிவித்திருக்கிறார்கள்.